# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2011 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, கமநல அபிவிருத்தி (திருத்தச்) சட்டம்

---

*(2011 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 22 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---

*2011, நவெம்பர் மாதம் 25 ஆம் திகதிய* ***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்*** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 20.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

**2011 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, கமநல அபிவிருத்தி (திருத்தச்) சட்டம்**

[2011 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 22 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]

ச. வ.- ஓ. 57/2007

**2000 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, கமநல அபிவிருத்திச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப்பெயர்.*

**1.** இச்சட்டம், 2011 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, கமநல அபிவிருத்தி (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*2000 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்கச் சட்டத்தில் புதிய பாகம் I ஐ உட்புகுத்துதல்.*

**2.** (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 2000 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, கமநல அபிவிருத்திச் சட்டம், அதன் 1 ஆம் பிரிவை உடனடுத்து முதன்மைச் சட்டவாக்கத்தின் பாகம் I எனப் பயனுறவேண்டிய பின்வரும் பாகத்தை உட்புகுத்துவதன் மூலம் இத்தாற்றிருத்தப் படுகின்றது :-

"பாகம் I

**நெற்காணிகளின் வாரப் பயிர்ச்செய்கையாளர்கள்**

*இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக வாரப் பயிர்ச்செய்கையாளர்களாகக் கருதப்பட்ட ஆட்கள்.*

1அ. ஆளொருவர், இலங்கைப் பிரசையொருவராகவிருந்து இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதியிலிருந்தும் அதன்பின்னரும், இரண்டாயிரமாம் ஆண்டு ஓகத்து பதினெட்டாம் நாளன்று தொடங்குகின்றதும், இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று முடிவடைகின்றதுமான காலப்பகுதியின்போது எந்நேரத்திலும் -

(அ) அத்தகைய ஆள், இரண்டாயிரமாம் ஆண்டு ஓகத்து பதினெட்டாம் நாளுக்கு முன்னர், அல்லது அந்நாளன்று செய்துகொண்ட எழுத்திலான அல்லது வாய்மொழி மூலமான உடன்படிக்கையொன்றின்கீழ் நெற்காணிப் பரப்பொன்றில் பயிர்செய்திருப்பின் ;

2-CM 013873 - 3,000 (2012/01)

(ஆ) அத்தகைய ஆள், 1ஈ என்னும் பிரிவின் ஏற்பாடுகளினது நியதிகளின்படி, இறந்துள்ள அல்லது நிரந்தரமாக ஊனமுற்றுள்ள வாரப்பயிர்ச்செய்கையாளரின் அடுத்துறுபவராகவிருந்து, அத்தகைய இறந்துள்ள அல்லது ஊனமுற்றுள்ள வாரப்பயிர்ச்செய்கையாளரினால் முன்னர் பயிர்செய்யப்பட்டிருந்த நெற்காணிப் பரப்பிலிருந்து வெளியேற்றப்பட்டிருப்பின்,

முதன்மைச் சட்டவாக்கத்தின் கருத்துக்குட்படவும் அதன் நோக்கங்களுக்காகவும் வார பயிர்ச் செய்கையாளரொருவராகக் கருதப்படுதல் வேண்டும்.

*நெற்காணிப் பரப்பின் ஆட்சி, வாரப் பயிர்ச்செய்கையாளர் எனக் கருதப்படும் ஆளொருவருக்கு அளிக்கப்பட முடியாதிருக்குமிடத்து பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கை முறை.*

1ஆ. (1) இரண்டாயிரமாம் ஆண்டு ஒகத்து பதினெட்டாம் நாளன்று தொடங்குகின்றதும், இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று முடிவடைகின்றதுமான காலப்பகுதியின்போது எந்நேரத்திலும், பிரிவு 1அ இல் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் நெற்காணிப்பரப்பின் ஆட்சியினது தன்மை, ஏதேனும் விற்பனை அல்லது கைமாற்றம் காரணமாக அல்லது ஏதேனும் நீதிமன்றத்தின் ஏதேனும் கட்டளையின்மேல் மாறியுள்ளவிடத்து, ஆளெவரும், அத்தகைய ஆள் பிரிவு 1அ இன் ஏற்பாடுகளினது பயனைக்கொண்டு வாரப் பயிர்ச்செய்கையாளராகக் கருதப்படினும்கூட, அத்தகைய ஏதேனும் நெற்காணிப்பரப்பின் ஆட்சியிலிடப்படுதலோ அல்லது அத்தகைய ஏதேனும் பரப்பின் ஆட்சி அவருக்குக் கொடுக்கப்படுதலோ ஆகாது :

ஆயின், எவ்வாறாயிருப்பினும், மேலே குறிப்பீடு செய்யப்படுகின்றவாறான அத்தகைய வார பயிர்ச்செய்கையாளர், அவர் எந்த நெற்காணிப் பரப்பின் வாரப்பயிர்ச் செய்கையாளராகக்

கருதப்படுகின்றாரோ அந்த நெற்காணிப்பரப்பின் ஆட்சியில் அவர் இடப்படுவதிலிருந்து அல்லது அவருக்கு ஆட்சி கொடுக்கப்படுவதிலிருந்து அவரைத் தடுக்கின்ற காரணத்தை ஆவணமுறை யான எண்பிப்புடன் எடுத்துக்காட்டி, கமநல சேவைகள் ஆணையாளர் தலைமையதிபதிக்கு அதற்கென எழுத்தில் விண்ணப்பமொன்றைச் செய்யலாம். ஆணையாளர் தலைமையதிபதி, சூழ்நிலைகளில் தேவைப்படக்கூடியவாறான அத்தகைய விசாரணைக்குப் பின்னரும், அவர் முன்னருள்ள நிகழ்வுகளைக் கவனத்திற்கொண்ட தன் மேலும், அவசியமானதென அவர் கருது கின்றவாறான ஏதேனும் மேலதிக விளக்கத்தை யளிக்கும்படி அத்தகைய ஆளுக்கு அழைப்பு விடுப்பதன் மேலும், அத்தகைய ஆளை இயைபான நெற்காணிப்பரப்பின் ஆட்சியிலிடுவதற்கு அல்லது அக்காணியின் ஆட்சி அத்தகைய ஆளுக்குக் கொடுக்கப்படுவதற்குப் பதிலாக அத்தகைய ஆளுக்கு நட்டஈடு செலுத்தப்படுதல் வேண்டுமெனக் கட்டளை ஆக்குதல் வேண்டும்.

(2) மேலேயுள்ள காப்புவாசகத்தின் நியதிகளின் படி நட்டஈடு செலுத்துவதற்கான கட்டளையை ஆக்குவதில் கணக்கிற்கெடுக்கப்படவேண்டிய கட்டளைகளையும் மற்றும் நட்டஈடாகச் செலுத்தப் பட வேண்டிய தொகை எந்த அடிப்படையில் தீர்மானிக்கப்படவேண்டுமோ அந்த அடிப்படை யையும் குறித்துரைக்கின்ற ஒழுங்குவிதிகள் ஆக்கப்படுதல் வேண்டும்.

*நெற்காணிப் பரப்பொன்றின் குத்தகை பெறுநர், வாரப் பயிர்ச் செய்கை யாளராகக் கருதப்படாதிருக்க வேண்டிய விடத்து.*

1இ. (469 ஆம் அத்தியாயமான) காணி அபிவிருத்திக் கட்டளைச்சட்டத்தின்கீழ் வழங்கப் பட்ட அனுமதிப்பத்திரமொன்றினைப் பின்பற்றி ஆளொருவர் -

(அ) அத்தகைய அனுமதிப்பத்திரம் வைத் திருப்பவரே அத்தகைய நெற்காணிப் பரப்பைப் பயிர்செய்தல் வேண்டுமென்ற நிபந்தனைக்கமைய அத்தகைய நெற் காணிப்பரப்பை வைத்திருக்குமிடத்து ; அத்துடன்

(ஆ) அத்தகைய நெற்காணிப்பரப்பைப் பயிர்ச் செய்கின்ற ஆளொருவருக்கு அத்தகைய நெற்காணிப்பரப்பைக் குத்தகைக்கு விடுமிடத்து,

அத்தகைய நெற்காணிப்பரப்பை அவ்வாறு பயிர் செய்கின்ற ஆள் இச்சட்டத்தின் கருத்துக்குட்பட வும் மற்றும் அதன் நோக்கங்களுக்காகவும் வாரப் பயிர்ச்செய்கையாளரொருவராகக் கருதப்படுத லாகாது.

*வாரப் பயிர்ச்செய்கை யாளர்களின் உரிமைகள் சென்றடைதல்.*

1ஈ (1) நெற்காணிப்பரப்பொன்று தொடர்பில் முதன்மைச்சட்டத்தின் கீழ் வாரப்பயிர்ச்செய் கையாளரொருவரின் உரிமைகள், அத்தகைய வாரப்பயிர்ச்செய்கையாளர் இறக்கும் அல்லது நிரந்தரமாக ஊனமுறும்பட்சத்தில், அத்தகைய வாரப் பயிர்ச்செய்கையாளரின் உயிரோடிருக்கும் வாழ்க்கைத்துணையைச் சென்றடைதல் வேண்டு மென்பதுடன், அத்தகைய வாழ்க்கைத்துணை இல்லாதபோது, அத்தகைய வாரப்பயிர்ச்செய்கை யாளரின் பிள்ளைகளுள் ஒருவரை மட்டுமே சென்றடைதலும் வேண்டும் :

ஆயின், பின்னைய சந்தர்ப்பத்தில், ஒன்றுக்கு மேற்பட்ட பிள்ளைகள் இருப்பின், எப்பிள்ளை யினது பிரத்தியேகமான வாழ்வாதாரம் பயிர்ச் செய்கையாகவுள்ளதோ, அப்பிள்ளைக்கே முன்னுரிமையளிக்கப்படுதல் வேண்டும் :

ஆயின், மேலும், பிரத்தியேகமான வாழ்வா தாரம் பயிர்ச்செய்கையாகவுள்ள ஒன்றுக்கு மேற்பட்ட பிள்ளைகள் இருப்பின், அத்தகைய பிள்ளைகளுள் மூத்த பிள்ளைக்கே முன்னுரிமை யளிக்கப்படுதல் வேண்டும்.

(2) இறக்கின்றவரான அல்லது நிரந்தரமாக ஊனமுற்றவராக வருகின்றவரான, ஒன்றில்

கூட்டாக அல்லது சுற்றுமுறையில் வேறெவரேனும் வாரப்பயிர்செய்கையாளருடன் பயிர்செய்யப்படும் நெற்காணிப்பரப்பொன்றின் வாரப்பயிர்ச் செய்கையாளரொருவரின் உரிமைகள், அத்தகைய பரப்புத்தொடர்பாக இப்பிரிவின் ஏற்பாடுகளுக் கிணங்கச் சென்றடைதல் வேண்டும்.

*வாரப் பயிர்ச்செய்கை யாளரினால் அடுத்துறு பவரொருவர் பெயர் குறித்து நியமிக்கப் படுதல்*

*1உ.* (1) பிரிவு 1ஈ இன் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், வேறெவரேனும் வாரப்பயிர்ச்செய்கை யாளருடன் அல்லது வாரப்பயிர்ச்செய்கையாளர்களுடன் கூட்டாக அல்லது சுற்றுமுறையில் நெற்காணிப் பரப்பொன்றைப் பயிர்செய்கின்றவர்கள் தவிர்ந்த, எவரேனும் வாரப்பயிர்ச்செய்கை யாளர், அவர் இறக்கும் அல்லது நிரந்தரமாக ஊனமுறும்பட்சத்தில், அவர் பயிர்செய்கின்ற நெற்காணிப்பரப்புத் தொடர்பில் இச்சட்டத்தின்கீழ் அத்தகைய வாரப்பயிர்ச்செய்கையாளரின் உரிமைகளுக்கு அடுத்துறுவதற்கு உரித்துடையவராக விருக்கவேண்டிய அடுத்துறுபவராக அவரது குடும்பவுறுப்பினருள் எவரையும் பெயர்குறித்து நியமிக்கலாம்.

(2) அடுத்துறுபவரொருவரின் ஏதேனும் பெயர் குறித்த நியமனம், அத்தகைய பெயர்குறித்த நியமனத்தைச் செய்த வாரப்பயிர்ச்செய்கையாளரினால் எந்நேரத்திலும் இல்லாதாக்கப்படலாமென்பதுடன், அத்தகைய வாரப்பயிர்ச்செய்கை யாளரினால் அடுத்துறுபவரொருவரின் புதிய பெயர் குறித்த நியமனமொன்று செய்யவும்படலாம்.

(3) அடுத்துறுபவரொருவரின் பெயர்குறித்த நியமனமும் அத்தகைய ஏதேனும் பெயர்குறித்த நியமனத்தின் இல்லாதாக்குகையும், பெயர்குறித்த நியமனம் அல்லது இல்லாதாக்குகை தொடர்பான

நெற்காணிப்பரப்பு எவ்விடப்பரப்பினுள் அமைந் துள்ளதோ, அவ்விடப்பரப்புக்குப் பொறுப்பாக வுள்ள அல்லது அவ்விடப் பரப்புத் தொடர்பிலான அலுவலகமுறையான கடமைகளில் ஈடுபட்டுள்ள அரசாங்க அதிபரின் அல்லது பிரதேச செயலா ளரின் அல்லது காணிப்பதிவாளரின் அல்லது ஒரு பிரசித்த நொத்தாரிசுவின் அல்லது சமாதான நீதவானின் முன்னிலையில் பொருளளவில் நகல்பிரதிகளில் எழுதி நிறைவேற்றப்பட்டுக் கையொப்பமிடப்பட்ட விதித்துரைக்கப்பட்ட படிவத்திலான ஆவணத்தில் ஒரு வாரப்பயிர்ச் செய்கையாளரினால் பயனுறுத்தப்படுதல் வேண்டும்.

(4) மூன்றாம் உட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட ஆவணமொன்றை எழுதி நிறைவேற்றுவதன்மீது முத்திரைத்தீர்வையெதுவும் விதிக்கப்படுதலோ அறவிடப்படுதலோ ஆகாது.

(5) மூன்றாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க எழுதி நிறைவேற்றப்பட்ட ஆவணத்தின் மூலப்பிரதி யும் நகல் பிரதியும், (3) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட எந்த முறையான அலுவலரின் முன் னிலையில் ஆவணம் எழுதி நிறைவேற்றப்படுகின் றதோ அந்த எவரேனும் அலுவலரினால் பதிவுக் காக ஆணையாளர் தலைமையதிபதியிடம் சமர்ப் பிக்கப்படுதல் வேண்டும். அத்தகைய ஏதேனும் ஆவணம் ஆணையாளர் தலைமையதிபதியினால் உரியமுறையில் பதிவுசெய்யப்பட்டிருந்தாலொழிய, செல்லுபடியுடையதாதலாகாது.

(6) ஆணையாளர் தலைமையதிபதி, (5) ஆம் உட் பிரிவின்கீழ் அவரிடம் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணத் தின் மூலப்பிரதியைப் பதிவுக்குப்பின்னர், பெயர் நியமனத்தை அல்லது இல்லாதாக்குகையைச் செய் கின்ற வாரப்பயிர்ச்செய்கையாளருக்குத் திருப்பிக் கொடுத்தல் வேண்டுமென்பதுடன். பதிவேடு களைப் பேணுகின்ற நோக்கத்துக்காக அதன் நகல்

பிரதியை வைத்திருத்தலும் வேண்டும். அத்தகைய பதிவேடுகள், விதித்துரைக்கப்பட்ட கட்டணக் கொடுப்பனவைச் செலுத்துவதன்மீது எவரேனுமா ளினால் பார்வையிடப்படுதல் வேண்டும்.

(7) ஏதேனும் நெற்காணிப்பரப்புத் தொடர்பில் இச்சட்டத்தின்கீழ் வாரப்பயிர்ச்செய்கை யாளரொருவரின் உரிமைகளுக்கு அடுத்துறுப வரை அதன்மூலம் பெயர்குறித்து நியமிக்கின் றதும், (3) ஆம் உட்பிரிவின்கீழ் குறித்துரைக்கப்பட் டதுமான ஆவணமொன்று பதிவுசெய்யப்பட்ட பின்னர், அவ்வுரிமைகளுக்கான அடுத்துறுப வராக வேறெவரேனுமாளை அதன்மூலம் பெயர் குறித்து நியமிக்கின்றதும், அவ்வுட்பிரிவிற் குறித் துரைக்கப்பட்டதுமான ஆவணமொன்று, பதிவு செய்யப்பட்ட ஆவணத்தினால் பயனுறுத்தப்பட்ட பெயர்குறித்த நியமனம், இல்லாதாக்குகை ஆவணமொன்றைப் பதிவுசெய்வதன்மூலம் உரிய முறையில் இல்லாதாக்கப்பட்டிருந்தாலொழிய, பதிவுசெய்யப்படுதலாகாது. பதிவுசெய்யப்பட்ட பெயர்குறித்த நியமனம் ஒரே ஆவணத்தில் இல்லா தாக்கப்படலாமென்பதுடன், அதற்குப்பதிலாக வேறேதேனும் பெயர்குறித்த நியமனம் செய்யவும் படலாம். அப்பட்சத்தில், அத்தகைய இல்லாதாக்கு கையும் பெயர்குறித்த நியமனமும் எந்த ஆவணத்தில் இணைந்துள்ளனவோ அந்த ஆவணம் பதிவுசெய்யப்படலாமென்பதுடன், உரிய பதிவின்மேல், முன்னர் பதிவுசெய்யப்பட்ட பெயர் குறித்த நியமனத்தின் இல்லாதாக்குகையாகவும் மற்றும் ஒரு புதிய நியமத்தரின் பெயர்குறித்த நியமனமாகவும் தொழிற்படுதலும் வேண்டும்.

(8) ஒரு வாரப்பயிர்ச்செய்கையாளர் இறக்கும் அல்லது நிரந்தரமாக ஊனமுறும் பட்சத்தில், ஒரு கமத்தொழிற் காணிகள் இடாப்பில் புதிய வாரப் பயிர்ச்செய்கையாளரொருவரின் பெயரைப் பதி வதன்மூலம் அதனைத் திருத்துவதற்கு 53 ஆம்

பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ் ஆணையாளர் தலைமையதிபதிக்கு விண்ணப்பமொன்று செய்யப் படுமிடத்து, (1) ஆம் உட்பிரிவின்கீழ் வாரப்பயிர்ச் செய்கையாளரின் உரிமைகளுக்கு அடுத்துறுபவ ரொருவரைப் பெயர்குறித்து நியமிக்கின்ற, அல்லது (2) ஆம் உட்பிரிவின்கீழ் அத்தகைய ஏதே னும் பெயர்குறித்த நியமனத்தை இல்லாதாக்கு கின்ற ஆவணம் ஏதேனுமிருப்பின் அது, ஆணை யாளர் தலைமையதிபதியினால் கவனத்திற் கொள்ளப்படுதல் வேண்டுமென்பதுடன், விண் ணப்பத்தின் நிகழ்வுகளைச் சரிபார்த்ததன்மேல், அவர், இயைபான நெற்காணியின் புதிய வாரப் பயிர்ச்செய்கையாளராக விண்ணப்பகாரரின் பெயரைச் சேர்ப்பதற்குத் தேவைப்பட்ட பதிவீடு களைச் செய்யும்படி, அத்தகைய விண்ணப்பம் தொடர்பான நெற்காணி எந்த இடப்பரப்பினுள் அமைந்துள்ளதோ அந்த இடப்பரப்பின் கமநல அபிவிருத்திப் பேரவைக்குக் கட்டளையிடுதலும் வேண்டும்.

(9) இப்பிரிவின்கீழ் ஆணையாளர் தலைமையதி பதியிடம் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் பற்றிய பதிவேடுகளைப் பேணுவதற்கு வைத்திருக்கப்பட வேண்டிய இடாப்புக்களுட்பட (3) ஆம் உட்பிரிவின் கீழ் குறித்துரைக்கப்பட்ட ஆவணமொன்றைப் பதிவு செய்வதற்கான நடவடிக்கைமுறையை விதிக்கின்ற ஒழுங்குவிதிகள் ஆக்கப்படுதல் வேண்டும்.

10. இப்பிரிவின் நோக்கங்களுக்காக "குடும்ப வுறுப்பினர்" என்பது, வாரப்பயிர்ச்செய்கையாள ரின் வாழ்க்கைத்துணை அல்லது ஒரு மகன் அல்லது ஒரு மகள் என்று பொருள்படும் ; அவர் களது முக்கியமான புரிதொழில் பயிர்ச்செய்கை யாகவிருத்தலும், அவர்களது ஒரே வருமானமூலம் வாரப்பயிர்ச்செய்கையாளரினால் பயிர்செய்யப் பட்ட நெற்காணிப்பரப்பிலிருந்து பெறப்படுதலும் வேண்டும்.

*அடுத்துறுபவரெவரும் இல்லாத விடத்து.*

1ஊ. (1) ஏதேனும் நெற்காணிப் பரப்பின் வாரப் பயிர்ச்செய்கையாளர் இறக்குமிடத்து அல்லது நிரந்தரமாக ஊனமுறுமிடத்து, அத்துடன் அத்தகைய பரப்புத் தொடர்பில், விடயத்துக்கேற்ப, அத்தகைய இறந்துள்ள அல்லது நிரந்தரமாக ஊனமுறுகின்ற வாரப்பயிர்செய்கையாளரின் உரிமைகளை மரபுரிமைவழியாகப் பெறுவதற்கு 1ஈ அல்லது 1உ என்னும் பிரிவின் ஏற்பாடுகளினது நியதிகளின்படி அடுத்துறுபவரெவரும் இல்லாத விடத்து, அத்தகைய பரப்பின் சொந்தக்காரராகவுள்ள நிலக்கிழார், அவ்வாறு விரும்பினால் அத்தகைய நெற்காணிப் பரப்பின் ஆட்சியை எடுத்து, அத்தகைய பரப்பின் சொந்தக் காணிப்பயிர்ச் செய்கையாளராக அதனைப் பயிர்செய்யலாம் :

ஆயின், சொந்தக்காணிப் பயிர்ச்செய்கையாளராக அத்தகைய காணியை பயிர்செய்வதற்கு முன்னர், நிலக்கிழார், சொந்தக்காணிபயிர்ச் செய்கை யாளராக அத்தகைய நெற்காணிப்பரப்பை அவ்வாறு பயிர்செய்வதற்கான அவரது உட்கருத்துப்பற்றி ஆணையாளர் தலைமையதிபதிக்கு எழுத்திலான அறிவித்தல் கொடுத்தல் வேண்டும்.

(2) வாரப்பயிர்ச்செய்கையாளர் இறந்துள்ளார் அல்லது நிரந்தரமாக ஊனமுற்றுள்ளார் என்றும், இறந்துள்ள அல்லது நிரந்தரமாக ஊனமுற்ற வாரப் பயிர்ச்செய்கையாளரின் உரிமைகளை மரபுரிமைவழியாகப் பெறுவதற்கு 1ஈ அல்லது 1உ என்னும் பிரிவின் ஏற்பாடுகளினது நியதிகளின்படி குடும்பத்தில் அடுத்துறுபவரெவரும் இல்லை என்றும் ஆணையாளர் தலைமையதிபதியின் திருப்திக்கு எண்பிக்கப்படின், அவர் அத்தகைய நெற்காணிப்பரப்பின் சொந்தக்காரரை அதன் சொந்தக் காணிப்பயிர்செய்கையாளராக அத்தகைய பரப்பில் இருப்பாட்சிசெய்து பயிர்செய்வதற்கு அனுமதித்தல் வேண்டும்.

*ஏதேனும் நெற்காணிப் பரப்புத் தொடர்பில் இறந்துள்ள அல்லது நிரந்தரமாக ஊனமுற்ற வாரப்பயிர்ச் செய்கை யாளரின் உரிமைகளுக்கு உரித்துடைய வராகவிராத ஆள் அதனைப் பயன் படுத்துதலோ அல்லது அதில் இருப்பாட்சி செய்தலோ ஆகாது.*

*1எ.* (1) நெற்காணிப்பரப்பொன்றின் வாரப் பயிர்ச்செய்கையாளர் இறந்துள்ளவிடத்து அல்லது நிரந்தரமாக ஊனமுற்றுள்ளவிடத்து, அத்தகைய நெற்காணிப்பரப்பு தொடர்பில் வாரப்பயிர்ச் செய்கையாளரின் உரிமைகளுக்கு உரித்துடையவராகவிராத ஆளெவரும், அத்த கைய நெற்காணிப்பரப்பை இருப்பாட்சிசெய்தலோ அல்லது பயன்படுத்துதலோ ஆகாது.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணாக ஆளொருவர் நெற்காணிப்பரப்பொன் றைப் பயன்படுத்துமிடத்து அல்லது இருப்பாட்சி செய்யுமிடத்து, ஆணையாளர் தலைமையதிபதி, ஒரு கட்டளையிற் குறித்துரைக்கப்படவேண்டிய வாறான அத்தகைய தேதியன்றோ அல்லது அதற்குமுன்னரோ அத்தகைய பரப்பிலிருந்து வெளியேறும்படி அத்தகைய ஆளுக்கு எழுத்தில் கட்டளையிடுதல் வேண்டும். அத்தகைய ஆள் அத்தகைய கட்டளைக்கிணங்கியொழுகத் தவறு வாராயின், அவர் 8 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக் கிணங்க இயைபான நெற்காணிப்பரப்பிலிருந்து வெளியேற்றப்படுதல் வேண்டும்.

*வாரப் பயிர்ச் செய்கை யாளர்களின் உரிமைகள் சென்றடைதல் தொடர்பான பிணக்குகளை ஆணையாளர் தலைமை யதிபதி தீர்மானித்தல்.*

*1ஏ.* (1) ஏதேனும் நெற்காணிப்பரப்பின் வாரப் பயிர்ச்செய்கையாளரொருவர் இறப்பதன்மேல் அல்லது நிரந்தரமாக ஊனமுறுவதன்மேல், இச் சட்டத்தின்கீழ் அத்தகைய வாரப்பயிர்ச்செய்கை யாளரின் உரிமைகள் எவ்வாளைச் சென்றடைதல் வேண்டுமென்பது பற்றி பிணக்கொன்றுள்ள விடத்து, பிணக்குக்கான திறத்தவர்கள், அத்தகைய பிணக்குப் பற்றி பதிவுத்தபால் மூலம் ஆணை யாளர் தலைமையதிபதிக்கு எழுத்திலான அறிவித்தலைக் கொடுத்தபின்னர், அத்தகைய பிணக்கைத் தீர்மானத்துக்காக முதலில் ஆணை யாளர் தலைமையதிபதிக்கு ஆற்றுப்படுத்துதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழான அறிவித்தலைப் பெற்றதன்மேல், ஆணையாளர் தலைமையதிபதி, அப்பிணக்கை கமநல நியாயசபையொன்றுக்கு ஆற்றுப்படுத்துதல் வேண்டுமென்பதுடன்,

இறந்துள்ள அல்லது நிரந்தரமாக ஊனமுற்ற வாரப்பயிர்ச்செய்கையாளரின் உரிமைகள் சென்றடையவேண்டிய ஆளைத் தீர்மானிக்கும் நோக்கத்துக்காக விசாரணையொன்றை நடாத்தும் படி அத்தகைய நியாயசபையைப் பணித்தலும் வேண்டும்.

(3) கமநல நியாயசபையின் தீர்மானம், அத்தகைய பிணக்குக்கான திறத்தவர்களுக்கான பிரதிகளுடன் பதிவுத் தபால்மூலம் ஆணையாளர் தலைமையதிபதிக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் பாகம் I இன் தலைப்புக்களை மாற்றீடு செய்தல்.

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 1 ஆம் பிரிவை உடனடுத்துக் காணப்படும் "பாகம் I" மற்றும் "நெற்காணிகளை பயிர்செய்வோருக்குள்ள உரிமைகள்" என்ற தலைப்புக்கள், பின்வருவதன் மூலம் இத்தால் மாற்றீடு செய்யப்படுகின்றன :-

"பாகம் Iஅ

**நெற்காணிகளின் வாரப்பயிர்ச்செய்கையாளர்களினது உரிமைகள்"**

முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவு, "6 ஆம் பிரிவின்" என்னும் சொற்களும் எண்ணும் அப்பிரிவில் காணப்படும் இடங்களிலெல்லாம் அவற்றுக்குப் பதிலாக "1அ என்னும் பிரிவின்" என்னும் சொற்களையும் எண்ணையும் இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவை நீக்குதல்.

**5.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவு இத்தால் நீக்கம் செய்யப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**6.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அதன் (6) ஆம் உட்பிரிவினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :-

"(6) அந்தந்த கமநல நியாயசபையினால் நடாத்தப்படவுள்ள விசாரணையின்போது நெற்காணிப் பரப்பின் நிலக்கிழாருக்கும் மற்றும் வெளியேற்றப்பட்ட

ஆளுக்கும் நேரடியாகவோ அல்லது பிரதிநிதியொருவர் மூலமாகவோ தம்பக்க வழக்கு கேட்கப்படுவதற்கான சந்தர்ப்பம் அளிக்கப்படுதல் வேண்டும். விசாரணை முடிவுற்றதன்மேல் கமநல நியாயசபையின் முடி பானது, ஆணையாளர் தலைமையதிபதிக்கும், நிலக் கிழாருக்கும் அத்துடன் வெளியேற்றப்பட்ட ஆளுக்கும் பதிவுத்தபால்மூலம் எழுத்தில் அறிவிக்கப்படுதல் வேண்டும்.";

(2) அதன் (6) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவுகளை உட்புகுத்துவதன் மூலமும் :-

‘‘(6அ) கமநல நியாயசபையின் முடிபினால் இன்னலுறுகின்ற நிலக்கிழார் அல்லது வெளியேற் றப்பட்ட ஆள், முடிபானது அவருக்கு அறிவிக்கப்பட்ட திலிருந்து முப்பது நாட்களினுள் அதற்கெதிராக சட்டப்பிரச்சினை அல்லது நிகழ்வுப் பிரச்சினையொன் றின்மீது 42அ என்னும் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட மீளாய்வுச் சபைக்கு மேன்முறையீடு செய்யலாம். அத்தகைய மேன்முறையீடு, மேன்முறையீட்டுக்கென அனுமதிக்கப்பட்ட காலப்பகுதியினுள் ஆணையாளர் தலைமையதி பதிக்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், ஆணையாளர் தலைமையதிபதி, 42அ என்னும் பிரிவின் உட்பிரிவு (5)இன் ஏற்பாடுகளின்கீழ்த் தாபிக்கப்பட்ட மீளாய்வுச் சபையொன்றினால் கேட் கப்படுவதற்காகவும் முடிவுறுத்தப்படுவதற்காகவும் 42அ என்னும் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட குழாத்திற்கு அத்தகைய மேன்முறை யீட்டை உடனடியாக ஆற்றுப்படுத்துதலும் வேண்டும்.

(6ஆ) 42அ என்னும் பிரிவின் (5) ஆம் உட்பிரிவின் கீழ்த் தாபிக்கப்பட்ட மீளாய்வுச் சபை (6அ) என்னும் உட்பிரிவின் கீழ் அத்தகைய சபைக்கு ஆற்றுப்படுத் தப்பட்ட எல்லா மேன்முறையீடுகளையும் விசாரணை செய்தல் வேண்டும் என்பதுடன், அதற்கான திறத்த வருக்கும் ஆணையாளர் தலைமையதிபதிக்கும் அதற்கான அதன் முடிபினை எழுத்தில் பதிவுத்தபால் மூலம் அறிவித்தல் வேண்டும்.

(6இ) மீளாய்வுச் சபையின் முடிபினால் இன்னலுறு கின்ற நிலக்கிழார் அல்லது வெளியேற்றப்பட்ட ஆள்,

முடிபானது அவருக்கு அறிவிக்கப்பட்டதிலிருந்து முப்பது நாட்களினுள் சட்டப்பிரச்சினையொன்றின்மீது அம்முடிபுக்கெதிராக மாகாணத்தின் மேல்நீதி மன்றத்திற்கு மேன்முறையீடு செய்யலாம். மேன்முறை யீட்டின் பிரதியொன்று மேன்முறையீடு செய்யப்படும் நேரத்தில் பதிவுத்தபால்மூலம் ஆணையாளர் தலைமை யதிபதிக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

(6ஈ) மேன்முறையீட்டுக்கென அனுமதிக்கப்பட்ட காலத்தினுள் மீளாய்வுச் சபையின் முடிபுக்கெதிராக மேன்முறையீடெதுவும் செய்யப்படாதவிடத்து, அத்த கைய முடிபானது இறுதியானதாதல் வேண்டும்.'';

(3) அதன் (7) ஆம் உட்பிரிவினை நீக்கம் செய்து அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவினை இடுவதன் மூலமும் :-

''(7) உட்பிரிவு (6அ) என்பதில் குறிப்பீடுசெய்யப் பட்டதான ஏதேனும் விசாரணையில் மீளாய்வுச் சபையானது -

(அ) வெளியேற்றம் இடம்பெற்றுள்ளதென்றும் அத்துடன் மேன்முறையீட்டுக்கென அனு மதிக்கப்பட்ட காலத்துக்குள்ளாக (6இ) என்னும் உட்பிரிவின்கீழ் அத்தகைய முடி பிற்கெதிராக மேன்முறையீடெதுவும் செய்யப் பட்டிருக்கவில்லையென்றும் அல்லது மாகாணத்தின் மேல்நீதிமன்றமானது (6இ) என்னும் உட்பிரிவின்கீழ்ச் செய்யப்பட்ட மேன்முறையீடொன்றில் மீளாய்வுச் சபையின் முடிபினை உறுதிப்படுத்தியுள்ள தென்றும் ; அல்லது

(ஆ) வெளியேற்றம் இடம்பெறாதுள்ளதென்றும் (6இ) என்னும் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட மேன்முறையீட்டில் மாகாணத்தின் மேல் நீதிமன்றமானது மீளாய்வுச் சபையின் முடி பினை வேறுபடுத்தியுள்ளதுடன் வெளியேற் றம் உண்மையில் இடம்பெற்றுள்ளது என் னும் நிகழ்வை உறுதிப்படுத்தியுள்ள தென்றும்,

மீளாய்வுச் சபைக்குத் தோன்றுமிடத்து, அப்போது மேற்கூறப்பட்ட நிலைமைகளுள், ஏதேனுமொன்றில்-

(i) வெளியேற்றப்பட்ட ஆள் நெற் காணிப் பரப்பின் பயன்பாட்டையும் இருப்பாட்சியையும் மீட்டுப் பெறுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும் ; அத்துடன்

(ii) ஆணையாளர் தலைமையதிபதி, விடயத்துக்கேற்ப, மீளாய்வுச் சபையின் அல்லது மாகாணத்தின் மேல் நீதிமன்றத்தின் முடிபைப் பெற்றதன் மேல், பிணக்கிலுள்ள நெற் காணிப் பரப்பில் இருப்பாட்சி செய்கின்ற எல்லா ஆட்களையும், கட்டளையிற் குறித்துரைக்கப்பட வேண்டியவாறான அத்தகைய தேதியன்று அல்லது அதற்குமுன்னர் அத்தகைய பரப்பிலிருந்து வெளியேற வேண்டுமென எழுத்திலான அத்தகைய கட்டளைமூலம் தேவைப்படுத்துதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஆள் அத்தகைய கட்டளைக் கிணங்கியொழுகத் தவறினால் 8 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக் கிணங்க அவர் அத்தகைய பரப்பிலிருந்து வெளியேற்றப்படுதலும் வேண்டும் ; அத்துடன்

(iii) அத்தகைய பரப்பின் நிலக்கிழார் எந்த ஆள் தொடர்பில் கட்டளையாக்கப்பட்டதோ அந்த ஆளானவர் அக் கட்டளையிற் குறித்துரைக்கப்பட்ட தேதிக்குப்பின்னர் அத்தகைய பரப்பில் தொடர்ந்தும் இருப்பாட்சி செய்கின்ற ஒவ்வொரு நாளுக்கும் (i) ஆம் உட்பந்தியிற் குறிப்பிடப்பட்ட ஆளுக்கு, விதித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய வீதத்

திலான சேதவீடுகளை, அத்தகைய ஆள் நிலக்கிழாரின் அறிவில்லாமலோ, சம்மதமின்றியோ அல்லது உடந்தையின்றியோ வெளியேற்றப்பட்டுள்ளாரென மீளாய்வுச் சபையானது அல்லது மாகாணத்தின் மேல்நீதிமன்றமானது முடிபு செய்திருந்தாலன்றி, செலுத்துவதற்குத் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**7**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவு, "6ஆம் பிரிவின்" என்னும் சொற்களும் எண்ணும் எங்கெல்லாம் காணப்படுகின்றனவோ அங்கெல்லாம் அச்சொற்களுக்கும் எண்ணுக்கும் பதிலாக, "1அ என்னும் பிரிவின்" என்னும் சொற்களையும் எண்ணையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவை நீக்குதல்.

**8**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவு இத்தால் நீக்கம் செய்யப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 39 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**9**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 39 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அதன் (1) ஆம் உட்பிரிவை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :-

"(1) ஆணையாளர் தலைமையதிபதி, நிர்வாக மாவட்டம் ஒவ்வொன்றிற்கும் அல்லது நிர்வாக மாவட்டம் ஒன்றிற்கோ அல்லது ஒன்றிற்கு மேற்பட்டவற்றிற்கோ என, இளைப்பாறிய நீதிபதிகளிடையேயிருந்து ஏழு ஆண்டுகளுக்கு மேற்பட்ட அனுபவமுடைய ஓராளை அல்லது கமநலச் சேவைகள் என்ற துறையில் நிறைவேற்று மட்டத்தில் ஏழு ஆண்டுகள் அனுபவத்தைக் கொண்டுள்ள இளைப்பாறிய பகிரங்க அலுவலர்களிடையேயிருந்து நியமிக்கப்பட்ட ஓராளைக்கொண்ட கமநல நியாயசபையொன்றை அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட கமநல நியாய சபைகளை நியமித்தல் வேண்டும்.";

(2) அதன் (2) ஆம் உட்பிரிவில், "கமநல நியாயசபையொன்றின் உறுப்பினரொருவர்" என்னும் சொற்

களுக்குப் பதிலாக, "கமநல நியாயசபைக்கு நியமிக்கப் பட்ட ஆள்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(3) அதன் (3) ஆம் உட்பிரிவை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :-

"(3) கமநல நியாயசபைக்கு நியமிக்கப்பட்ட ஒவ்வோர் ஆளும், அவரது பதவியை அவர் முன்னரே வறிதாக்கினாலன்றி, மூன்று ஆண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்குப் பதவிவகித்தல் வேண்டும்:
ஆயின் -

(அ) இறந்துபோன அல்லது பதவி துறந்த அல்லது பதவியிலிருந்து நீக்கப்பட்ட ஆளொருவருக்குப் பதிலாக நியமிக்கப்பட்ட ஆள் ஒருவர், அவர் எவ்வாளை அடுத்துறுகின்றாரோ அவ்வாளின் பதவிக் காலத்தில் முடிவுறாதெஞ்சியுள்ள பதவிக் காலப்பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) இலங்கையில் இல்லாத அல்லது சுகவீனமுற்ற ஆளுக்குப் பதிலாக நியமிக்கப்பட்டுள்ள ஆள் ஒருவர், அந்த ஆள் இலங்கையிலில்லாத அல்லது சுகவீனமுற்றுள்ள காலப்பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும்." ;

(4) அதன் (4) ஆம் உட்பிரிவினை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :-

"(4) காலம் கழிவதன் மூலம் பதவியை வறிதாக்குகின்ற ஆளொருவர் மீளவும் நியமிக்கப்படுவதற்குத் தகுதியுடையவராதல் வேண்டும்.";

(5) அதன் (5) ஆம் உட்பிரிவினை நீக்கம் செய்வதன் மூலமும் ; அத்துடன்

(6) அதன் (9) ஆம் உட்பிரிவை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :-

"(9) கமநல நியாயசபையொன்று, இச்சட்டத்தின்கீழ் அதற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட எல்லா விண்ணப்பங்

*களையும் முறைப்பாடுகளையும், அத்தகைய விண்ணப்பம் அல்லது முறைப்பாடு பெறப்பட்ட தேதியிலிருந்து ஆறுமாதகாலப்பகுதிக்குள் விசாரணை செய்து முடிவுசெய்தல் வேண்டுமென்பதுடன் அதன் மீதான முடிபுபற்றி அதற்கான திறத்தவர்களுக்கும் ஆணையாளர் தலைமையதிபதிக்கும் பதிவுத்தபால் மூலம் அறிவித்தலும் வேண்டும்.''.*

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 40 ஆம் பிரிவை நீக்குதல்.*

**10.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 40 ஆம் பிரிவானது இத்தால் நீக்கப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 41 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**11.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 41 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அதன் (1) ஆம் உட்பிரிவில், ''மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு மேன்முறையீடொன்றை முன்வைத்திராதவிடத்து'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''மீளாய்வுச் சபைக்கு மேன்முறையீடொன்றை முன்வைத்திராதவிடத்து'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) அதன் (2) ஆம் உட்பிரிவினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவினை இடுவதன் மூலமும் :-

''(2) அத்தகைய திறத்தவர் எவரும் கமநல நியாயசபையின் முடிபுக்கெதிராகக் கமநல நியாய சபையின் முடிபு அவருக்குக் கிடைத்ததிலிருந்து முப்பது நாட்களுக்குள் மீளாய்வுச் சபைக்கு மேன்முறையீடொன்றைச் செய்துள்ளவிடத்து, மீளாய்வுச் சபையின் முடிபானது கொடுக்கப்பட்டவுடனும் பயனுறுத்தப்படுதல் வேண்டும்.''.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 42 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.*

**12.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 42 ஆம் பிரிவானது இத்தால் நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :-

*''மேன்முறையீட்டுக்கான உரிமை.*

42. இச்சட்டத்தின்கீழ் கமநல நியாயசபையொன்றுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட ஏதேனும் விண்ணப்பம் அல்லது முறைப்பாடு மீதான அதன் முடிபினால் இன்னலுற்ற எவரேனும் திறத்தவர், அத்தகைய முடிபு பெறப்பட்ட தேதியிலிருந்து

*முப்பது நாட்களினுள் 42அ என்னும் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட மீளாய்வுச் சபைக்கு மேன்முறை யீடொன்றைச் செய்யலாம்.".*

*முதன்மைச் சட்டவாக்கத்தின் புதிய பாகம் IVஅ என்பதனை உட்புகுத்துதல்.*

**13.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 42 ஆம் பிரிவினை உடனடுத்துப் பின்வரும் புதிய பாகம் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், இது அச்சட்டவாக்கத்தின் IVஅ என்னும் பாகமாகப் பயனுறுதலும் வேண்டும் :-

"பாகம் IVஅ

**மீளாய்வுச் சபைகள்**

*மீளாய்வுச் சபைகள்.*

*42அ. (1) நீதிச்சேவை ஆணைக்குழுவானது மூன்று ஆண்டுகள் கொண்ட காலப்பகுதி ஒன்றுக்கு மீளாய்வுச் சபைகளைத் தாபிக்கும் நோக்கத்திற்காக சட்டம் மற்றும் கமநலச்சேவைகள் என்ற துறைகளில் பரந்த அறிவைக் கொண்டுள்ள ஆட்களிடையே இருந்து ஒன்பது ஆட்களுக்கு மேற்படாத ஆட்களைக் கொண்ட குழாம் ஒன்றை நியமித்தல் வேண்டும்.*

*(2) குழாத்தின் உறுப்பினர் ஒருவர் இறப்பி னால், பதவி துறத்தலினால், பதவியிலிருந்து அகற்றப்படுவதனால், இலங்கையில் இல்லாமை யினால் அல்லது சுகவீனத்தினால் பதவியை வறிதாக்குமிடத்து, அவரது இடத்தில் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய இன்னோர் ஆள் நியமிக்கப்படுதல் வேண்டும்.*

*(3) (அ) இறந்துள்ள, பதவி துறந்துள்ள அல்லது பதவியிலிருந்து அகற்றப்பட்டுள்ள உறுப்பினர் ஒருவரின் இடத்தில் நியமிக்கப்பட்ட ஆளொருவர், அவர் எந்த உறுப்பினரை அடுத்துறுகின்றாரோ அந்த உறுப்பினரின் பதவிக்காலத்தில் முடிவுறா தெஞ்சியுள்ள பதவிக் காலத்திற்குப் பதவிவகித்தல் வேண்டும்.*

*(ஆ) இலங்கையில் இல்லாதிருக்கின்ற அல்லது சுகவீனமுற்றிருக்கின்ற உறுப்பினர் ஒருவருக்காகச் செயலாற்றுவதற்கு நியமிக்கப்பட்ட ஆள் ஒருவர்,*

அவர் எவ்வுறுப்பினரை அடுத்துறுகின்றாரோ அவ்வுறுப்பினர் இல்லாதிருக்கின்ற அல்லது சுகவீனமாகவுள்ள காலப்பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

(4) குழாத்தின் உறுப்பினர்களில் ஒருவர், குழாத்தின் தவிசாளராக நியமிக்கப்படுதல் வேண்டும்.

(5) (அ) இச்சட்டத்தின் நோக்கத்திற்கென ஆணையாளர் தலைமையதிபதியினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான எண்ணிக்கையான மீளாய்வுச் சபைகள் தாபிக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) ஆணையாளர் தலைமையதிபதி அத்தகைய மாவட்டத்தின் தேவைப்பாடுகளைப் பொறுத்து ஏதேனும் குறிப்பிட்ட நிருவாக மாவட்டத்திற்குத் தேவைப்படுத்தப்பட்ட மீளாய்வுச் சபைகளின் எண்ணிக்கையை, அத்தகைய மீளாய்வுச் சபைகளிடையேயிருந்து தீர்மானித்தல் வேண்டும் :

ஆயின், ஒரு நிருவாக மாவட்டத்திற்குள் செயற்படுவதற்கென ஆணையாளர் தலைமையதிபதியால் தீர்மானிக்கப்பட்ட மீளாய்வுச் சபைகளின் எண்ணிக்கை மூன்றினை விஞ்சாதிருத்தல் வேண்டும்.

(6) இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் ஏதேனும் மீளாய்வுச் சபைக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட எவரேனும் இன்னலுற்ற திறத்தவரின் மேன்முறையீடுகளை ஏற்றுக் கவனித்தல் (5) ஆம் உட்பிரிவின்கீழ்த் தாபிக்கப்பட்ட அத்தகைய மீளாய்வுச் சபையின் கடமையாதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஏதேனும் மேன்முறையீடு தொடர்பிலான வழக்கு நடவடிக்கைகள், அத்தகைய ஏதேனும் மேன்முறையீடு மீளாய்வுச் சபையினால் பெறப்பட்ட தேதியிலிருந்து ஆறுமாத காலப்பகுதிக்குள் முடிவுறுத்தப்படுதலும் வேண்டும்.

(7) ஒவ்வொரு மீளாய்வுச் சபையும், (6) ஆம் உட்பிரிவின்கீழ் மீளாய்வுச் சபை ஒன்றுக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகிக்கும்

நோக்கத்திற்காக (1) ஆம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட குழாத்தின் உறுப்பினர்களிடையேயிருந்து தவிசாளரினால் தெரிவுசெய்யப்பட்ட மூன்று உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும். தவிசாளரானவர் ஏதேனும் குறிப்பிட்ட மீளாய்வுச் சபையில் தம்மையும் உறுப்பினரொருவராகத் தெரிவுசெய்யலாம்.

(8) குழாத்தின் தவிசாளர் இப்பிரிவின்கீழ் அமைத்துருவாக்கப்படும் மீளாய்வுச் சபையொன்றின் உறுப்பினர் ஒருவராக இருக்குமிடத்து, அப்போது, அவர் அல்லது அவர் சபையொன்றின் உறுப்பினரொருவராக இல்லாதவிடத்து அப்போது, அத்தகைய தவிசாளரால் பெயர்குறித்து நியமிக்கப்படக்கூடியவாறான சபையின் அத்தகைய உறுப்பினர் அத்தகைய மீளாய்வுச் சபையின் தலைவராதல் வேண்டும்.

(9) மீளாய்வுச் சபை ஒவ்வொன்றுக்கும் செயலாளர் ஒருவர் நியமிக்கப்படுதல் வேண்டும். மீளாய்வுச் சபையின் செயலாளர் சபையால் விசாரிக்கப்படும் மேன்முறையீடு ஒவ்வொன்றும் தொடர்பிலும் அம்மேன்முறையீட்டுடன் தொடர்புற்றவாறு சபையின் முன்னிலையிலான அத்தகைய அனைத்து வழக்கு நடவடிக்கைகளினதும் பதிவேடொன்றைப் பேணுதல் வேண்டும்.

(10) மீளாய்வுச் சபை அவ்வாறு செய்வது பொருத்தமானது எனக் கருதுமாயின், அது எவரேனும் சாட்சியைச் சத்தியத்தின்மீது விசாரணைசெய்யலாம் என்பதுடன், அதன் முன்னிலையிற் தோற்றுமாறு அல்லது சபையின் அபிப்பிராயப்படி இயைபானவையாகக் கூடிய எவையேனும் ஆவணங்களை முன்வைக்குமாறு எவரேனும் ஆளுக்கு அழைப்பு விடுக்கலாம்.

(11) மீளாய்வுச் சபையொன்றின் தலைவரின் அல்லது மீளாய்வுச் சபையொன்றின் செயலாளரின் கைப்பட வழங்கப்பட்ட ஆவணங்கள், அறிவித்தல்கள் அல்லது அழைப்புக்கட்டளைகள் அந்த மீளாய்வுச் சபையால் வழங்கப்பட்டவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

(12) மீளாய்வுச் சபை எவரேனும் ஆளுக்கு அழைப்புக்கட்டளை வழங்கியுள்ளபோதும் அல்லது வழங்கியுள்ளதாகக் கருதப்படும்போதும் அத்துடன் அத்தகைய ஆள்-

(அ) நியாயமான காரணமின்றி அழைப்புக் கட்டளையில் குறிப்பிடப்பட்ட நேரத்திலும் இடத்திலும் மீளாய்வுச் சபையின் முன்னிலை யில் தோற்றத் தவறும்போதும் ; அல்லது

(ஆ) நியாயமான காரணமின்றி சத்தியத்தை எடுத்தோத அல்லது உறுதியுரையளிக்க மறுக்கும்போதும் அல்லது முறையாக சத்தியத்தை எடுத்தோதி அல்லது உறுதி யுரையளித்து அத்தகைய சபையால் விசா ரிக்கவும் தீர்மானிக்கவும்படவுள்ள கருமங் களை மருவியதாக மீளாய்வுச் சபையின் உறுப்பினர் ஒருவரால் அவருக்குத் தொடுக் கப்பட்ட ஏதேனும் வினாவுக்கு நியாயமான காரணமின்றி விடையளிக்க மறுக்கும் போதும் அல்லது தவறும்போதும் அல்லது ஏதேனும் அத்தகைய வினாவுக்குப் பொய் யான விடையொன்றை அளிக்கும்போதும் ; அல்லது

(இ) நியாயமான காரணமின்றி அவரது உடை மையில் உள்ளதும் மற்றும் முன்வைக்கு மாறு தேவைப்படுத்தப்பட்டதுமான ஏதே னும் ஆவணத்தை மீளாய்வுச் சபையின் முன்னிலையில் முன்வைக்க மறுக்கும் போதும் அல்லது தவறும்போதும்,

அத்தகைய ஆள் இச்சட்டத்தின்கீழ்த் தவறொன்றுக் குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவானொருவர் முன்னிலையில் சுருக்கமுறை விளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படு வதன்மேல் பத்தாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப் பணமொன்றுக்கு அல்லது மூன்று மாதங்களை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கான இருவகையி லொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண் டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

(13) செலுத்தப்படவேண்டிய படிகள் மற்றும் மீளாய்வுச் சபையொன்றின் கூட்டத்தில் கடைப் பிடிக் கப்பட வேண்டிய நடவடிக்கைமுறை என்பன தொடர்பில் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படலாம்.

*மீளாய்வுச் சபையின் முடிபு எப்போது நிறைவேற்றப் படுதல் வேண்டும் என்பது.*

42ஆ. (1) ஏதேனும் அத்தகைய மேன்முறையீட் டிற்கான திறத்தவர் எவரும் மீளாய்வுச் சபையின் முடிபு பற்றிய அறிவித்தல் அவருக்குக் கிடைக்கப் பெற்றதிலிருந்து முப்பது நாட்களுக்குள் மீளாய்வுச் சபையின் முடிபுக்கெதிராக மாகாணத்தின் மேல் நீதிமன்றத்திற்கு மேன்முறையீடொன்றைச் செய் திராதவிடத்து மீளாய்வுச் சபையின் முடிபுக்குப் பயனளிக்கப்படுதல் வேண்டும்.

(2) எவரேனும் அத்தகைய திறத்தவர் மீளாய்வுச் சபையின் முடிபு அவருக்குக் கிடைக்கப்பெற்றதி லிருந்து முப்பது நாட்களுக்குள் மீளாய்வுச் சபை யின் முடிபுக்கெதிராக மாகாணத்தின் மேல் நீதிமன்றத்திற்கு மேன்முறையீடொன்றைச் செய் துள்ளவிடத்து, அது தொடர்பில் மாகாணத்தின் மேல்நீதிமன்றத்தினால் கொடுக்கப்பட்ட முடிபுக்குப் பயனளிக்கப்படுதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 53 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**14.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 53 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அதன் (3) ஆம் உட்பிரிவை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :-

"(3) கமத்தொழிற் காணிகள் இடாப்பில் உள்ளடக் கப்பட்ட நெற்காணிப் பரப்பொன்றின் வாரப்பயிர்ச் செய்கையாளர் இறக்கும் அல்லது நிரந்தரமாக ஊனமுறும் விடயத்தில், புதிய வாரப்பயிர்ச்செய்கை யாளரின் பெயரைப் பதிதல் மூலம் இடாப்பைத் திருத்துவதற்கான விண்ணப்பமொன்று எழுத்தில் ஆணையாளர் தலைமையதிபதிக்குச் செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன், அந்நெற்காணிப்பரப்புத் தொடர்பில் விண்ணப்பகாரரை வாரப்பயிர்ச்செய்கை யாளராகப் பதிவுசெய்வதற்குச் சம்மதிக்கின்ற சொந்தக்

காரரிடமிருந்தான கடிதத்துடன் சேர்த்தனுப்படுதலும் வேண்டும் ; அத்துடன் ஆணையாளர் தலைமையதிபதி அதன்மீதான கட்டளையை ஆக்குதல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், விண்ணப்பகாரர் தாம் இறந்துள்ள அல்லது நிரந்தரமாக ஊனமுற்ற வாரப் பயிர்ச்செய்கையாளரின் குடிவார உரிமைகளுக்கு 1ஈ அல்லது 1உ என்னும் பிரிவின் ஏற்பாடுகளினது நியதிகளின்படி அடுத்துறுபவரென ஆணையாளர் தலைமையதிபதியின் திருப்திக்கு எண்பிக்குமிடத்து, ஆணையாளர் தலைமையதிபதி, சொந்தக்காரரின் சம்மதம் எவ்வாறிருப்பினும் அத்தகைய கட்டளையை ஆக்குதல் வேண்டும்.'';

(2) அதன் (3) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும் :-

''(3அ) ஆணையாளர் தலைமையதிபதி, கமத்தொழிற் காணிகள் இடாப்பை வருடாந்தம் நாளதுவரையாக்கும் நோக்குடன் நெற்காணிப் பரப்புகளின் வாரப் பயிர்ச் செய்கையாளர்களின் மதிப்பொன்றை வருடாந்தம் நடாத்துவதற்கான நடபடிகளை எடுத்தல் வேண்டும்.'';

(3) அதன் (8) ஆம் உட்பிரிவை நீக்கஞ் செய்வதன் மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 101 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**15**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 101 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) ''வெளியேற்றுதல்'' என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலமும் :-

'' ''மாகாணத்தின் மேல் நீதிமன்றம்'' என்பது, அரசியலமைப்பின் 154ஞ என்னும் உறுப்புரையின் நியதிகளின்படி மாகாணத்திற்கெனத் தாபிக்கப்பட்ட மேல்நீதிமன்றம் எனப் பொருள்படும்;'';

(2) ''நியதிச்சட்ட குடிவாரக்காரர்'' என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலமும் :-

" "நிரந்தரமாக ஊனமுற்றமை" என்பது, ஆளொருவர் தொடர்பில் -

(அ) இரண்டு கைகளையும் இழத்தல் ; அல்லது

(ஆ) இரண்டு கால்களையும் இழத்தல் ; அல்லது

(இ) இரு கண்களிலும் கண் பார்வையை இழத்தல் ; அல்லது

(ஈ) ஒரு கையையும் ஒரு காலையும் இழத்தல் ; அல்லது

(உ) ஒரு காலையும் ஒரு கண்ணில் கண் பார்வையையும் இழத்தல் ; அல்லது

(ஊ) ஒரு கையையும் ஒரு கண்ணில் கண் பார்வையையும் இழத்தல் ; அல்லது

(எ) உடற் பக்கவாதம் ; அல்லது

(ஏ) சித்தசுவாதீனமற்றிருத்தல்,

எனப் பொருள்படும்.".

முதன்மைச் சட்டவாக்கத்திற்கான பொதுவான திருத்தம்.

**16**. முதன்மைச் சட்டவாக்கத்தில், "மேன்முறையீட்டு நீதிமன்றம்" என்னும் சொற்கள் காணப்படும் இடங்களிலெல்லாம் அவற்றிற்குப் பதிலாக, "மாகாணத்தின் மேல் நீதிமன்றம்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் முதன்மைச் சட்டவாக்கம் இத்தால் திருத்தப்படுகின்றது.

ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**17**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்